# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:– முனைவர் .L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

| | | | |
|---|---|---|---|
| வா.சா. | 1 | நாள் : 03.03.2026 | |
| அசல் வழக்கு எண். | 40/2021 | | |
| பெயர் | மகாலட்சுமி | த/பெ | |
| வயது | | தொழில் | |
| கிராமம் | | தாலூக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழிசெய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கில் 1ம் வாதி ஆவேன். என் கணவர் புருஷோத்தமன் 2000ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இரண்டு மூன்று வாதிகன் என்னுடைய மகன்கள். 1, 2 பிரதிவாதிகன் என் கணவர் புருஷோத்தமனின் தம்பிகள். நான்காம் பிரதிவாதி அமுதகுமாரி என் கணவரின் தங்கை. மூன்றாம் பிரதிவாதி தாவா பிரிபடாத சொத்தை 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து கிரயம் வாங்கியவர். முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைதான். தாவப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 3ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் கொடுத்த கிரயப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | என் கணவரின் வாரிசு சான்றிதழ் |
| வா.சா.ஆ.3 | என் மாமனார் லெட்சுமணன் என்பவரின் வாரிசு சான்றிதழ். |
| வா.சா.ஆ.4 | என் மாமியாரின் தனம் என்பவரின் இறப்பு சான்றிதழ் |
| வா.சா.ஆ.5 | 1, 2, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | 1ம் பிரதிவாதி அறிவிப்பை வாங்க மறுத்து திரும்ப வந்த அஞ்சலக உறை |
| வா.சா.ஆ.7 | 2ம் பிரதிவாதி அறிவிப்பை வாங்க மறுத்து திரும்ப வந்த அஞ்சலக உறை |
| வா.சா.ஆ.8 | 3ம் பிரதிவாதி அறிவிப்பை வாங்க மறுத்து திரும்ப வந்த அஞ்சலக உறை |

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.